//மின்னஞ்சலில்//

**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் சென்னை – 600 006.**

**ந.க. எண். 9154 / அ4 / இ3 / 2018, நாள். 11.04.2018.**

---

**பொருள்** : தமிழ்நாடு அமைச்சுப்பணி – இளநிலை உதவியாளர் / தட்டச்சர்கள் /சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3 ஆகியோர்களுக்கு - உதவியாளராகப் பதவி உயர்வு / பணிமாறுதல் வழங்குவது - 15.03.2017 நிலவரப்படி தகுதி பெற்றவர்கள் விவரங்கள் கோருதல் – சார்பு.

**பார்வை** :
1. அரசாணை எண்.97, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள். 14.02.1996.
2. அரசாணை எண்.16, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள். 21.02.2002.
3. சென்னை -6, பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க. எண். 35116/அ4/இ3/2017, நாள். 04.08.2017.

---

மேற்காண் பொருள் சார்பாக பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர்களுக்கு உதவியாளர் பதவி உயர்வு மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை–IIIலிருந்து உதவியாளர்களாகப் பணி மாறுதல் வழங்குதல் சார்ந்தும் 15.03.2018 நிலவரப்படி உதவியாளர் பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதிவாய்ந்த நபர்கள் விவரங்களை அனைத்து சார்நிலை அலுவலர்களிடமிருந்து பெற்று முன்னுரிமைப் பட்டியல் வெளியிட்டு பதவி உயர்வு வழங்கப்பட வேண்டியுள்ளது.

பார்வை (3)ல் காணும் செயல்முறைகளின்படி 15.03.2017 நிலவரப்படி உதவியாளர் பதவி உயர்வுக்குத் தகுதியான முன்னுரிமைப் பட்டியல் வெளியிடப்பட்டது. அப்பட்டியலின்படி பதவி உயர்வு வழங்கப்பட்டவர்களைத் தவிர்த்து அடுத்து உள்ள 200 நபர்களுக்கான பட்டியல் இத்துடன் இணைத்து வெளியிடப்படுகிறது. அப்பட்டியலுக்குள் (25.04.2013க்குள் பணிநியமனம் பெற்ற இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை–3) நாளது தேதியில் 15.03.2018க்குத் தகுதி பெற்ற நபர்களின் விவரங்களை மட்டும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பெற்று, அதன் தொகுப்புப் பட்டியலினை உடனடியாகப் பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் பெயரிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து சார்நிலை அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் ஒவ்வொரு பணியாளர் சார்பாகவும் தனித்தனியாக விவரம் பெறப்படல் வேண்டும். அனைத்துக் கலங்களும் முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். கருணைஅடிப்படையில் நியமனம் பெற்ற பணியாளர்கள் சார்பாக வெளியிடப்பட்ட பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தலுக்கான அரசாணைகளின் நகல்கள் கண்டிப்பாக இணைத்தனுப்பப்படவேண்டும்.

பார்வை 1ல் காணும் இவ்வரசாணையின்படி 14.02.1996 மற்றும் அதற்குப்பின் இளநிலை உதவியாளராகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பார்வை (2)ல் காணும் அரசாணையின்படி உதவியாளர் பதவி உயர்வு பெறத் தகுதியுள்ள தட்டச்சர்கள் அனைவரும் 15.03.2018 அன்றைய தேதியிலோ அல்லது அதற்கு முன்போ ஒரு வருட காலம் இளநிலை உதவியாளர் பயிற்சியினைப் பெற்றுள்ளார்கள் என்பதற்கான சான்றினை அன்னார் பணிபுரியும் அலுவலகத் தலைவரிடம் பெற்று இணைத்தல் வேண்டும். இந்த அறிவுரைகளைப் பின்பற்றி முன்னுரிமைப் பட்டியலுக்கான விவரங்கள்அனுப்புதல் வேண்டும் என முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-3லிருந்து பணிமாறுதல் மூலம் உதவியாளராக நியமனம் பெறத் தகுதி பெற்றுள்ள (சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-3 பணியில் 5 ஆண்டு காலம் பணி முடித்திருத்தல் வேண்டும்) பணியாளர் எவரும் விருப்பம் தெரிவிப்பின், அவர்களது பணிவிவரங்களையும் உரிய படிவத்தில் பணிந்தனுப்புமாறு முதன்மைக் கல்வி அலுவலர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பட்டியலில் தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து தகுதி பெற்ற பணியாளர்களது பெயர்களும் விடுபடாமல் விவரங்களைப் பெற்றுத் தொகுத்து அனுப்புமாறும், அதற்கான சான்றினைத் தொகுப்புப் பட்டியலில் வழங்கிடுமாறும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். ஒவ்வொரு பணியாளர் சார்பிலும் தனித்தனியாக விவரப்படிவம் மற்றும் தொடர்புடைய இணைப்புகள் அனைத்தும் முதன்மைக் கல்வி அலுவலரின் தொகுப்புப் பட்டியலுடன் இணைத்தனுப்பப்பட வேண்டும். அனைத்து சார்நிலை அலுவலகங்கள் / பள்ளிகளிடமிருந்து விவரங்களைப் பெற்று

தொகுப்பு பட்டியலினைத் தயார் செய்து உடனடியாக 25.04.2018க்குள் தவறாமல் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என மீளவும் வலியுறுத்தப்படுகிறது.

இதில் காலதாமதம் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும் என்றும், தகுதி வாய்ந்த பணியாளர்களின் பெயர் ஏதும் தொகுப்புப் பட்டியலில் விடுபட்டிருப்பின், அதற்கு சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலரே முழுப் பொறுப்பேற்க வேண்டுமெனவும் தெரிவிக்கலாகிறது.

**இணைப்பு :**

1. 200 நபர்களுக்கான முன்னுரிமைப் பட்டியல்
2. படிவம்.

**ஒம்./- பெ. குப்புசாமி,**
**இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி).**

**பெறுநர்**- அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

**நகல் :** தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6
**நகல் :** மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6
**நகல் :** இயக்குநர், மாநில கல்வியியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-6
**நகல் :** இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை -6
**நகல் :** மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை – 6.
**நகல் :** இயக்குநர், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்ட இயக்ககம், சென்னை -6
**நகல் :** உறுப்பினர் செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை -6

(தங்கள் இயக்ககம் சார்ந்த விவரங்கள் அனுப்பும் பொருட்டு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.)

**நகல் :** இவ்வலுவலக 'அ2' பிரிவு.
**நகல் :** IAS, CIP Men & Women.

**படிவம்**

**15.03.2018 நிலவரப்படி கூடுதலாக சேர்க்கப்பட வேண்டிய இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை-3 பதவியிலிருந்து உதவியாளர் பதவிக்கு முழுத் தகுதி பெற்றவர்கள் விவரம்**

| | | |
|---|---|---|
| 1. | பெயர் / பதவி | |
| 2. | பணிபுரியும் அலுவலகம் | |
| 3. | பிறந்த தேதி | |
| 4. | தற்போதைய பதவியில் முதல் நியமன நாள். | |
| 5. | இளநிலை உதவியாளர் / தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் (கருணை அடிப்படையில் நியமனம் பெற்றவர்கள் சார்பாக அரசாணை எண் மற்றும் தேதி குறிப்பிட்டு, அதன் நகல் இணைக்கப்படல் வேண்டும்.) | |
| 6. | தற்போதைய பதவியில் நியமன முறை (தேர்வாணையம் மூலம் / கருணை அடிப்படை / பதவி உயர்வு / பிற துறையிலிருந்து மாறுதல்)<br>(1) தமிழ்நாடு தேர்வாணையக்குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பின் தேர்ச்சி பெற்ற ஆண்டு / தரம் எண் குறிப்பிடப்பட வேண்டும்.<br>(2) பதவி உயர்வு மூலம் நியமனம் பெற்றிருப்பின் எந்தப் பதவியிலிருந்து வந்தவர் என்ற விவரம் மற்றும் பதவி உயர்வு ஆணை விவரம்.<br>(3) பிறதுறையிலிருந்து மாற்றப்பட்டிருப்பின், துறை மாற்றலுக்கான அனுமதி ஆணை விவரம், பிறதுறையில் பணியில் சேர்ந்த நாள் மற்றும் கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் / தட்டச்சர் பணியில் சேர்ந்த நாள். | |
| 7. | இளநிலை உதவியாளர் / தட்டச்சர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்த நாள் / ஆணை விவரம் (கருணை அடிப்படையில் நியமனம் பெற்றவர்களுக்கு அரசாணையின் நகல் இணைக்கப்படல் வேண்டும். | |
| 8. | கல்வித்தகுதி | |
| 9. | பள்ளியில் தமிழ் பயிலவில்லை எனில், தமிழ் இரண்டாம் மொழித் தேர்வில் (TNPSC) தேர்ச்சி பெற்ற விவரம். | |

**/த.பி.பா./**

| 10. | துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற விவரம் | தேர்வு எழுதிய மாதமும், ஆண்டும் | தேர்வு முடிவு வெளிவந்த நாள் |
|---|---|---|---|
| | அ) பள்ளித் துணை ஆய்வர் தேர்வு பாகம் - 1 | | |
| | ஆ) பள்ளித் துணை ஆய்வர் தேர்வு பாகம் - 2 | | |
| | இ) பள்ளித் துணை ஆய்வர் தேர்வு பாகம் - 3 | | |
| | ஈ) சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் - 1 | | |
| | உ) மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு | | |
| 11. | பவானிசாகர் பயிற்சி பெற்ற நாட்கள் மற்றும் தேர்ச்சி பெற்ற விவரம். | | |
| 12. | தட்டச்சராக பணிபுரியும் பணியாளர் எனில், இளநிலை உதவியாளர் பயிற்சி பெற்ற காலம். | | |
| 12 (a) | தட்டச்சராக பணிபுரியும் பணியாளர் எனில், "Computer on Office Automation" முடித்த தேதி (ஆதார ஆவணத்துடன்) | | |
| 13. | உதவியாளர் பதவி உயர்வு ஏற்கனவே வழங்கப்பட்டு தற்காலிகப் பணித் துறப்பு செய்திருப்பின், அதனை (temporary relinquishment) ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆணையின் எண் மற்றும் தேதி. | | |
| 14. | கடந்த 5 ஆண்டுகளில் தண்டனை ஏதும் அளிக்கப்பட்டுள்ளதா? ஆம் எனில், அதன் முழு விவரம். | | |
| 15. | அன்னார் மீது தமிழ்நாடு குடிமுறைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(பி) ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் உள்ளதா? | | |
| 16. | பணியாளர் நீண்டகாலம் (ஓராண்டு) விடுப்பில் உள்ளாரா? | | |
| 17. | பணியாளரின் பதவி உயர்வு குறித்து சார்நிலை அலுவலரின் தெளிவான பரிந்துரை. | | |

மேற்காணும் விவரங்கள் அனைத்தும் பணிப்பதிவேட்டுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது.

**அலுவலரின் கையொப்பம்.**

தகுதிவாய்ந்த அனைத்துப் பணியாளர்களின் பெயர்களும் விடுபடாமல் தொகுத்து அனுப்பப்பட்டுள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது.

**முதன்மைக்கல்வி அலுவலரின் கையொப்பம்.**

**<u>தக்கலை மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்</u>**

**<u>ந.கஎண் 1970/அ1/2018 நாள் 17.04.2018</u>**

நகல் தகவலுக்காக அனுப்பலாகிறது. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் தெரிவித்துள்ளவாறு அரசு உயர்/மேல்நிலைப் பள்ளி மற்றும் அலுவலகத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்/தட்டச்சர் பதவியிலிருந்து உதவியாளர் பதவி உயர்விற்கு தகுதி வாய்ந்தவர்கள் இணைப்பில் குறிப்பிட்டுள்ள படிவத்தில் 19.04.2018 அன்று கணினியில் தட்டச்சு செய்து 3 நகல்களில் தலைமையாசிரியர் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டு பணிப்பதிவேட்டுடன் அ1 பிரிவில் நேரில் சமர்ப்பித்திட அனைத்து அரசு உயர்/மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தகுதிவாய்ந்தவர்கள் எவரும் இல்லையெனில் தவறாது இன்மை அறிக்கை சமர்ப்பித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்டக்கல்வி அலுவலர்
தக்கலை